முருகப்பெருமான் துணை

**மகான் கணநாதர் அருளிய அறிவுரை ஆசி நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

18.05.2023, வியாழக்கிழமை

1. ஞான வள்ளலாக வந்தநல்
ஞானியே ஆறுமுக அரங்கனே
வானவர்கள் போற்றும் தருமம்
வாரி வழங்கிடும் தேசிகனே
2. தேசிகனே உன் பெருமை கூறி
தெரிவிப்பேன் அறிவுரை ஆசி
ஆசியதும் சோபகிருது விடைதிங்கள்
அறிவிப்பேன் சதுர்திகதி குருவாரம்
(சோபகிருது வருடம் வைகாசி மாதம் 04 ம் நாள், 18.05.2023, வியாழக்கிழமை)
3. வாரமதில் கணநாதர் யானும்
வழங்குவேன் உலகநலம்பெற
சோரமின்றி மக்களை தேற்றிட
சுத்தநெறி காட்டும் அரங்கனே
4. அரங்கனே உன் மார்க்கமதும்
அகிலம் எங்கிலும் பரவிட
வரங்களாக மக்கள் தனக்கு
வள்ளல் தன்மை பெருகி
5. பெருகியே அவரவர்க்கு உள்ளும்
பெருந்தன்மை எனும் தருமம்
பெருகியே மாற்றம் கிட்டும்
பேருலகில் தருமபலம் கூடிட
6. கூடிட சக்திநிலை கொண்ட
குருமார்கள் பலரும் வெளிப்பட
நாடிடும் ஞானத் தலைமையாக
நன்மையே புரிகின்ற வண்ணம்
7. வண்ணமுடன் அதிகாரவர்க்கமும்
வறுமை வெல்லும் படியான
எண்ணம் சேவை கலந்து
எல்லா வகையும் தேற்றம் தருவர்

8. தருகவே இனியும் காலமதை
தரணியோர் கடத்தி நிற்கா
ஆறுமுகா அரங்கா என
அனுதினமும் செபதபமதை செய்து

9. செய்துமே அனுகி பிரணவக்குடிலை
சென்றடைந்து சரணாகதி
அய்யன் முருகப்பெருமானின்
அவதார அரங்கனிடம் கண்டுவிட

10. கண்டுவிட மெய்ஞான நிலை
காண்பவரெல்லாம் தேறி
உண்டாவர் ஞானிகள் ஆக
உலகையே மாற்றும் மகா

11. மகா சக்திகளாகி மரணம் வெல்வர்
மறுமை வென்று கலியில்
மகான்கள் ஆட்சி தருவர்
மொழிந்திட்ட அறிவுரை ஆசி முற்றே

–சுபம்–